
Koviloor Digital Library

சிதம்பரம் அருள்மிகு

தில்லையம்மன் கோயில் தல வரலாறு

26/2



ACC. NO. 46312

தில்லையம்மன் திருக்கோயில் அலுவலகம்

சிதம்பரம்.

1977

Koviloor Digital Library

Koviloor Digital Library


26/2

உ

தேவி சகாயம்.

சிதம்பரம்
அருள்மிகு தில்லையம்மன் கோயில்
வரலாறு.





எழுதியவர் :

புலவர் து. சோ. நடராசன்

தமிழாசிரியர்

ஆறுமுக நாவலர் உயர்நிலைப்பள்ளி

சிதம்பரம்

வெளியிடுவோர் :

அருள்மிகு தில்லையம்மன் திருக்கோயில்

சிதம்பரம்.

விலை ரூ. 1—00

Koviloor Digital Library

உள்ளே —

1. தில்லையம்மன் தல வரலாறு

— புலவர் து. சோ. நடராசன்

2. தில்லைக்காளியம்மன் திருப்பதிகம்

— திருவாசகமணி
கே. எம். பாலசுப்பிரமணியம்

3. காளி பதிறுை

— பித்துக்குளி
முருகதாஸ் சுவாமிகள்

இப்புத்தகம் கிடைக்குமிடம் :
தில்லையம்மன் திருக்கோயில் அலுவலகம்,
சிதம்பரம்.

குமரன் பிரஸ், வடக்குமெயின் ரோடு, சிதம்பரம்.

Koviloor Digital Library

26/2

அருள்மிகு

தில்லையம்மன் கோயில் வரலாறு.

இப்பாரத கண்டத்தில் பூலோக கைலாயம் எனப் போற்றப்படுவது பெரும்பற்றப் புலியூராகிய சிதம்பரமே. தில்லை வனமாகிய இத்திருத்தலத்தில் புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும் ஆதிசேடனுகிய பதஞ்சலி முனிவரும் சிவபெருமானை வழிபட்டு அப்பெருமானது ஐந்தொழில் திருக்கூத்தினைத் தாம் கண்டு பேரின்ப முற்றனர். அவர்களது அருந்தவத்தினுல் உலக மக்கள் அனைவரும் இறைவனது ஆனந்தத் திருக்கூத்தினைக் கண்டு மகிழும் வாய்ப்பு ஏற்பட்டது. உலகமாகிய புருடனுக்கு இருதய கமலமாக விளங்குவது சிதம்பரம். உள்ளத்தின் நுண்ணிய பரவெளியாகிய தில்லைச்சிற்றம்பலத்திலே உலகெலாம் உய்ய உலக அன்னையாகிய உமையம்மை கண்டு மகிழ இறைவன் ஆனந்தத் திருக்கூத்து இயற்றுகின்ருன்.

பெரும்பற்றப் புலியூராகிய இத்தலத்தில் இறைவனது திருவருளைப் பெற்ற தெய்வங்களுறையும் திருக்கோயில்கள் பல அவற்றுள் தில்லை நடராசப்பெருமான் கோயிலையடுத்து மக்களால் போற்றப்பெறும் திருக்கோயில் தில்லையம்மன் கோயிலாகும். இது தில்லைப் பெருங்கோயிலுக்கு வடக்கே கால் மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் மேற்கு நோக்கிய சந்நிதியாகும். இச்சந்நிதியின் எதிரே சிவப்பிரியை என்ற தீர்த்தம் அமைந்துள்ளது. இத்தீர்த்தம் தில்லை நடராசப்பெருமானுக்குரிய பத்துத் தீர்த்தங்களுள் ஒன்ருகும். இத் திருக்கோயிலின் கருவறையில் எழுந்தருளியிருக்கும் அம்மையின் திருப்பெயர் தில்லைவன முடைய பரமேசுவரி எனக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. வடமொழிப் புராணத்தில் இவ்வம்மையின் பெயர் பிரம்ம சாமுண்டீசுவரி எனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வம்மை நான்கு திருமுகங்களும் நான்குதிருக்கரங்களும் கொண்டு தன்னை வழிபடும் அன்பர்களுக்கு வேண்டிய வரங்களையருளும் அமைதி தோற்றத்துடன் அமர்ந்த திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிருள். இக்கோயிலுக்குள் அம்மையின் சந்நிதிக்கு எதிரே சிறிது வடக்கில் தில்லைக்காளியின் சந்நிதி அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய

Koviloor Digital Library

நிலையில் அமைந்த இச்சந்நிதியில் எழுந்தருளிய கோரசக்தியாக காளியின் திருவுருவம் அமைக்கப் பெற்றுள்ளது. இத்திருவுருவமே தில்லைக்காளியென வழங்கப்படுகிறது. இதனுடைய கோர நிலைக்கு அடையாளமாக இதனைக் குங்குமத்தால் மூடியிருத்தலைக் காணலாம்.

கோயிலின் நடுவே மேற்கு நோக்கிய நிலையில் அமைந்த பிரம்ம சாமுண்டீசுவரியின் திருவுருவம் அமைதிகோலமாகவும், அதனெதிரே வடமேற்குத் திசையில் கிழக்கு நோக்கியமைந்த தில்லைக்காளியின் திருவுருவம் கோரரூபமாகவும் விளங்குதலைக் காணலாம். மேற்குறித்த அம்மையின் இருவேறு அமைப்பினைக் குறித்து வடமொழிப் புராணத்தில் பின்வரும் செய்திகள் கூறப்பட்டுள்ளன

தில்லைவனமாகிய இத்தலத்தில் நடராசப் பெருமானுக்குத் திருக்கோயில் ஏற்படுவதற்கு முன்னமேயே காளி தேவிக்குக் கோயில் அமைந்திருந்தது. சிவபெருமான், வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும் தம்மை வேண்டி வழிபட்டமைக்கு இரங்கி ஆனந்தத்தாண்டவ தரிசனத்தைக் காட்டியருளத் திருவுளங் கொண்டார். அப்பொழுது தில்லைவனத்தின் ஆதிதெய்வமாய் இருந்த காளி மிகவும் செருக்குற்றுத் தன்னுடன் ஆடற்போட்டிக்கு வரவேண்டுமென்று சிவபெருமானை அழைத்தாள். அவளது செருக்கினை அடக்க எண்ணிய இறைவன், நடனத்தில் வெற்றி பெற்றவர் எவரோ அவரே இத்தில்லைத் தலத்திற்குத் தலைவராக வேண்டும் எனவும், ஆடலில் தோல்வியுற்றவர் இத்தலத்தை விட்டு இதன் எல்லையை அடையவேண்டுமெனவும். ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, தேவர், முனிவர் முதலியோர் காணக்காளியுடன் ஆடத்தொடங்கினர். சிவபெருமானேடு ஆடற்போட்டியில் கலந்துகொண்ட காளி அப்பெருமான் ஆடிய ஊர்த்துவதாண்டவம் என்னும் நடனத்தைக் கண்டு அதனை யொப்பத் தானும் ஆடமுடியாத நிலையில் வெட்கித் தலைகுனிந்து தனதுதோல்வியை ஒப்புக் கொண்டாள். அதனல் தில்லைவனத்தின் நடுவில் கோயில் கொண்டிருந்த அவ்வம்மை அந்நகரத்தை விட்டு அதன் எல்லையை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்கதையை ஒட்டியே "தில்லைக்காளி எல்லைக்கப்பால்" என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று. தில்லையின் எல்லையை யடைந்த காளிதேவி, தான்

Koviloor Digital Library

முன் சிவபெருமானை மதியாது வாதுக்கு அழைத்த குற்றம் தீர வேண்டிச் சிவப்பிரியை என்ற தீர்த்தத்தில்மூழ்கி இறைவனை வழிபட்டு கோர உருவம் நீங்கி தில்லை வனமுடைய பரமேசுவரி என்னும் சாந்த உருவத்தைப் பெற்று. சாமுண்டீசுவரி என்னும் பெயருடன் இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருந்து தன்னை வழிபடும் அன்பர்கள் வேண்டிய நலங்களையெல்லாம் வேண்டியவாறே வழங்கியருளுகின்றாள் என்பதே இக்கோயிலைப்பற்றிய புராண வரலாறாகும்.

இனி இத்திருக்கோயில் தோன்றிய வரலாற்றைத் தமிழ் நூல்களின் துணைகொண்டும், கல்வெட்டுகளின் துணைகொண்டும் ஆராய்ந்து தெளிதல் அவசியமாகும்.

நம் தமிழ் மக்கள் தமக்குரிய காவல் தெய்வங்களின் திருக்கோயில்களாக ஊர்கள் தோறும் தவறாது அமைத்துக் கொண்டிருக்கும் கோயில்களுள் காளியின் திருக்கோயிலும் ஒன்றாகும். ஊர் தோறும் காளியம்மைக்கு அமைந்த இத்திருக்கோயிலைப் பிடாரி கோயிலென்றும் கூறுவர். பிடாரி என்ற தெய்வம் சத்த மாதர்களுள் ஒருத்தி என்பர். 'அறுவர்க்கிளைய நங்கை' இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு, சூருடைக் கானகம் உகந்த காளி, என இளங்கோவடிகள் காளி என்னும் தெய்வத்தைக் குறித்துப் போற்றியுள்ளார். இத்தில்லை நகரத்திற்குரிய ஊர்க்காவல் தெய்வமாக விளங்கும் தெய்வம் தில்லை வனமுடைய பரமேசுவரியே, இவ்வம்மையின் திருக்கோயில் தில்லையின் வடஎல்லையில் அமைந்திருப்பது இத்தெய்வம் தில்லையின் எல்லைத் தெய்வம் என்ற உண்மையைப் புலப்படுத்துவதாகும்.

கொற்றவையாகிய தெய்வம் தமிழ் மக்களால் பல்லாயிரம் ஆண்டுகளாக வழிபட்டுவரும் வெற்றித் தெய்வமாகும். இத்தெய்வம் தன்னை வழிபடும் வீரர்களுக்கு வெற்றியளிக்கும் அருள் நோக்கத்தோடு விளங்கும் சிறப்பினை ''சிறந்த கொற்றவை நிலை' என்ற தொடரால் தொல்காப்பியர் குறித்துள்ளார் (தொல்-புறம் 4) இக்கொற்றவையைக் காடுகிழாள் எனவும் நம்முன்னோர் போற்றி யுள்ளனர். இப்பெயரை நோக்குங்கால் 'காடும் காடு-சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்தில் திருமாலைப் போன்று இக்கொற்றவையும் மக்களால் வழிபடப் பெற்ற செய்தி புலனாகும் அம்முறையில் தில்லைவனமாகவிளங்கும் இப்பெரும்பற்றப்புலியூரில் கொற்றவைக்குச் சிறப்புடைய கோயில் அமைந்திருப்பது மிக்வும்

Koviloor Digital Library

பொருத்தமுடையதே. மேலும் காளியைப் பாலை நிலத்திற்குத் தெய்வமாக வைத்து வழிபடும் வழக்கம் நெடுங்காலமாக நமது நாட்டில் உள்ளது. முல்லை நிலந் தெய்வமாகிய மாயோனுக்குத் தங்கையும், குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகனுக்குத் தாயுமாகிய கொற்றவை, முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலை எனப்பெயரெய்திய நிலத்திற்குத் தெய்வமாயினுள் என்பது.

''கோலமுல்லையுங் குறிஞ்சியும் அடுத்தசில்லிடங்கள்
நீலவாட்படை நீலிகோட்டங்களும் நிரந்து
காலவேனிலிற் கடும்பகற்பொழுதினைப் பற்றி
பாலையுஞ் சொலலாவன வுள பரல்முரம்பு''

(பெரிய—திருக்குறிப்பு—15)

என்ற செய்யுளால் விளங்குகிறது.

இறைவன் திருவாலங்காட்டில் காளி காண ஆடிய நடனத்திற்கு ஊர்த்துவ தாண்டவம் என்று பெயர்.

''ஆடினர் காளி காண ஆலங்காட்டு அடிகளாரே''

என்பது அப்பர் திருவாக்கு வெற்றித் தெய்வமாகிய காளி, வெற்றிக்களிப்பு மேம்பட்டுத் தோன்ற ஆடிய ஆட்டத்தினுல் உலகிற்குப் பேரழிவு நேர்ந்தது. அதனை எண்ணிய சிவபெருமான் அவ்வழிவினை விலக்கத் திருவுளங்கொண்டு காளி செய்யும் ஊன நடனத்திற்கு எதிராகத் தான் ஞான நடனம் ஆடி வென்று அடக்கினுர் என்பது வரலாறு. இந்நிகழ்ச்சியை நினைவு கூறும் நிலையில் தில்லைப்பெருங்கோயிலுள் நிருத்த சபையில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியை மூன்றும் குலோத்துங்க சோழகன் எழுந்தருளச் செய்திருத்தலைக் காணலாம். மன்னன் எழுந்தருளுவித்த ஊர்த்துவதாண்டவமூர்த்தியின் அமைப்பினை எண்ணி அதனேடு தொடர்புடைய நிலையில் அச்சோழனுடைய படைத்தலைவனுகிய கோப்பெருஞ்சிங்கன், அம்மூர்த்தியின் ஆடல் கண்டு தோற்று அடங்கி, அமைதியுற்ற காளிக்குத் தில்லையின் வடக்கு எல்லையிலே இத்திருக்கோயிலை அமைத்திருத்தல் வேண்டும். தில்லைக்கு வந்து இறைவனது பரமானந்தப் பெருங் கூத்தினை வணங்கி மகிழும் அன்பர்களெல்லாம் தம்மால் காணப் பெற்ற அத்திரு நடனம் உலகில் அவ்வப்போது நிகழும் ஊனக் கூத்தினை வென்று அடக்குதற் பொருட்டு நிகழும் ஞானத்திருக் கூத்தே என்னும் உண்மையை உளங்கொள்ளும் நிலையில் தில்லை வனமுடைய பரமேசுவரியை வழிப்பட்டுச் செல்லுதலைத் தம் கடமையாகக் கொண்டுள்ளனர்.

Koviloor Digital Library

உலக மக்களது குற்றங்களைக் கண்டு பெற்ற அன்னையாகிய தாய் சினமுடையளாய் அவர்களை ஒறுத்துத் தண்டிக்கும் நோக்கத்துடன் கொண்ட திருவுருவே காளி என்ற திருவுருவாம். இறைவனோடு பிரிவற விளங்கும் திருவருளாகிய சக்தியைப் புருடசக்தி, கோரசக்தி, போகசக்தி என மூவகையாகப் பிரித்துரைப்பர் பெரியோர். உலகஉயிர்களெல்லாம் ஆணும் பெண்ணுமாய் அன்பினால் கலந்து மகிழ வேண்டும். என்னும் திருக்குறிப்புடன் இறைவன் அருகேவிளங்கும்உமையம்மையைப் போகசக்தி என்பர். உலகில் தீமைகள் மலிந்தநிலையில் அவற்றை வெகுண்டு அழிக்க முற்படும் காளியைக் கோரசக்தி என்பர். காத்தற் கடவுளாகிய திருமாலைப் புருடசக்தியெனப் போற்றுவர். சிவபெருமானுக்குரியனவாக மேற்குறித்த மூன்று சக்திகளுள் கோர சக்தியின் விளைவால் உயிர்களுக்குத் தோன்றும் துன்பங்களைப் போக்கி இன்பம் அளிக்கும் நிலையில் தில்லையம்பலத்துள் இறைவன் ஆடும் திருக்கூத்தே பரமானந்தத் தாண்டவம் எனப்படும். இத்தாண்டவம் நிகழாதாயின் இவ்வுலகில் மிகப்பெரிய போர்களும் குழப்பங்களும் உண்டாகி மன்னுயிர்கள் மடிய, கோர சக்தியின் தாண்டவமே மிகுதிப்படும். இச்செய்தியை,

"தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ"

எனவரும் திருப்பாடலில் மணிவாசகப்பெருமான் தெளிவாக விளக்கியுள்ளார்.

எவ்வுயிர்க்கும் அன்னையாகிய இறைவியே கொடியோரை ஒறுத்து நல்லோரைக் காத்தற்பொருட்டுக் கோரசக்தியாகிய காளியாகத் திருவுருக்கொண்டாள். தீமையைச் சினந்து நீக்கும் நிலையில் அமைந்த இவ் அன்னையை வழிபடுதல் தீயவைகளையும், தீய எண்ணங்களையும் எதிர்த்து அழிக்கவல்ல பேராண்மையை நமக்கு வழங்கும் ஆற்றல்மிக்க வழிபாடாகும் இக்கருத்தினாலேயே போரில் பகைவரை எதிர்த்து அழிக்க எண்ணிய வீரர் அனைவரும் வெற்றி வேற்றடக்கைக் கொற்றவையைப் பரவிப் போற்றுதலைத் தமது இன்றியமையாத கடமையாகக் கொண்டனர். கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் சோழரது ஆட்சியை மீண்டும் உருவாக்க எண்ணிய விசயலாயசோழன் தனக்கு

Koviloor Digital Library

வெற்றியளிக்கும் நிசும்பசூதனி என்ற கொற்றவையை வணங்கி அவ்வம்மைக்குத் தஞ்சைமாநகரில் சிறந்ததோர் கோயிலைக்கட்டி வழிபட்ட செய்தி இங்கு நினைக்கத் தக்கதாகும்.

இக்கருத்தினாலேயே பல்லவ குலச் சிற்றரசனாகவும் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்குப் படைத்தலைவனாகவும் விளங்கிய கோப்பெருஞ்சிங்கனது ஆட்சியில் சிதம்பரத்தில் தில்லை வனமுடைய பரமேசுவரியின் திருக்கோயில் அமைக்கப் பெற்ற தெனத் தெரிகிறது.

கி. பி 1229 முதல் 1278 வரை சோழநாட்டின் வட பகுதியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த பல்லவகுலச் சிற்றரசனாகிய கோப்பெருஞ்சிங்கன் காலத்தில்தான் தில்லையம்மன்கோயிலாகிய இத்திருக்கோயில் புதிதாகக் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஸ்ரீசகலபுவன சக்கரவர்த்திகள் கோப்பெருஞ் ரிங்கதேவர்'............ விக்கிரமசோழன் தெங்குத் திருவீதியில் தென்பக்கத்தில் எழுந்தருளிவிக்கிற பிடாரியாருக்கு ஸ்ரீகோயிலும் திருமுற்றமுமாக விற்றுக் கொடுத்த நிலம்'' (தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி—8, எண் 717) என இக் கோயிலில் காணப்படும் கல்வெட்டுப்பகுதியை ஊன்றிநோக்குங் கால் தில்லைவனமுடைய பரமேசுவரிக்குரிய இத்திருக்கோயில் கோப்பெருஞ்சிங்கன் என்றபல்லவவேந்தன் காலத்து அமைக்கப் பெற்ற செய்தி நன்கு புலனாகும்.

இத்திருக்கோயிலில் கோப்பெருஞ்சிங்கன் ஆட்சிக்காலத்தில் வரையப்பட்டனவாக பன்னிரெண்டு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் இத்திருக்கோயில் அமைதற்குறிய நிலம் வாங்கிய செய்தியும், அதன் நான்கு எல்லைகளும் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்மைக்கு நாள்வழிபாட்டிற்கும், திருப்போன கத்திற்கும், இத்தேவிக்குச் சாத்தியருளும் மஞ்சள்காப்பு நெல்லிக் காப்பு உள்ளிட்ட செலவினங்களுக்கும் வேண்டிய நிவந்தங்கள் நிலமாகவும், வரியாகவும் விடப்பட்ட செய்திகளும், இத்திருக் கோயிலில் வழிபாடு இயற்றும் நம்பியாருக்குப் பூசைப்பேற்றிற் காக நிலமளிக்கப்பெற்ற செய்தியும், இவ்வம்மையின் திருக்கோ யிலில் ஊர்மக்களுக்குக் கடன் கொடுத்து உதவுவதற்குங்கோயில் நிருவாகத்திற்கும் ஏற்ற முறையில் பண்டாரம் (Treasury) ஒன்று

Koviloor Digital Library

அமைந்திருந்தசெய்தியும் இத்திருக்கோயிலுக்கென கௌனியன் சிவன் திருச்சிற்றம்பலமுடையான் என்ற தலைவனால் பலரிடமிருந்து விலைக்கு வாங்கிச் சேர்க்கப் பெற்ற நிலங்களின் எல்லையும் பற்றிய விவரங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. இக்குறிப்புகளைக் கூர்ந்து நோக்குங்கால் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் தில்லைவன முடைய இப்பரமேஸ்சுவரியின் திருக்கோவில் மக்களுக்கு அருளும் பொருளும் வழங்கும் சிறப்புடைய கோவிலாக அமைதிருந்த செய்தி நன்கு புலனாகும்.

கோயில் அமைப்பும் சிறப்பும்:— தொடக்கத்தில் தில்லைவன முடைய பரமேசுவரிக்காக ஐம்பது குழி நிலத்தில் அமைக்கப் பற்ற இத்திருக்கோயில், நாளடைவில் பிள்ளையார், முருகன், பைரவர், சண்டேசர் முதலிய பரிவாரங்களுக்குரிய தனிக் கோயில்களையும், உள்மதில், புறமதில்களாகிய மதில்களையும் திருக்கோபுரத்தையும் பெற்று வளர்ந்துள்ளது.குடதிசை நோக்கி விளங்கும் இக்கோயிலின் கோபுரத்தைக் கடந்தவுடன் தென் பக்கத்தில் விநாயகர் திருக்கோயிலும் வடபக்கத்தில் முருகன் திருக்கோவிலும் பெருமிதத்துடன் காட்சியளிக்கின்றன. ஆறுமுகங்களையுடைய முருகன். வள்ளி, தெய்வயானையுடன் அங்கு வீற்றிருக்கும் காட்சி கண்டுகளிக்க வேண்டிய ஒன்றாகும். கல்வெட்டுகளோடு கூடிய கற்களும் நடனமாடும் பெண்களின் சிற்பங்களும் முருகன்கோயிலின் சுவர்களில்சேர்க்கப்பட்டுள்ளன வெளிகோபுரத்திற்கும் உட்கோபுரத்திற்கும் இடைப்பட்ட மண்டபம் 1960 ஆம் ஆண்டில் திருப்பணி செய்யப்பட்டது. தன் நாட்டு மக்களும்மன்னனும் போரில் பகைவர்களையும் அழித்து வெற்றி பெறுதலும் வேண்டும். எனஎண்ணிட வீரர்கள் வெற்றித் தெய்வமாகிய காளியை வழிபட்டு தம்மைத் தாங்களே பலியாக கொடுக்கும் வழக்கம், நம் நாட்டில் தொன்று தொட்டு நிலவி வருகிறது. அவ்வழக்கத்தையொட்டித் தில்லைவனமுடைய பரமேசுவரியின் இத்திருக்கோயிலில்எட்டுவீரர்கள்தம்தலையினைத் தாமே வெட்டிக்கொண்டு பலிக்கொடுக்கும் செய்தியை விளக்கும் முறையில் எண்மர் வடிவங்கள் அமைந்திருத்தல் காணலாம். வடமேற்குத்திசையில் தில்லைக் காளி படிவம் உள்ளது. உற்சவ மூர்த்திக்கு அருகில் அகோர வீரபத்திரர் உருவமும், வணங்கும் நிலையிலமைந்த வேந்தர் உருவங்கள் மூன்றும் அமைந்துள்ளன. அவ்வேந்தர்களின் பீடத்தில் சிதைந்தநிலையில்கல்வெட்டு ஒன்று

Koviloor Digital Library

உள்ளது. வடக்குப் பிரகாரத்தில் துர்க்கையின் படிமமும் சண்டி கேசுவரர் கோயிலும், பைரவர் கோயிலும் அமைந்துள்ளன. விமானத்தின் வெளிபுறத்தில் வடக்கு கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று இடங்களிலும் மூவகைச் சக்தியின் உருவங்கள் உள்ளன. இவற்றுள் தென்பக்கத்திலுள்ள சக்தி தட்சிணாமூர்த்தியின் நிலைக்கு ஏற்ப மான் மழுவுடன் உள்ளது அருகில் முனிவர்களின் உருவங்களும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு கூத்தாடும் வடிவத்தில் அமைந்துள்ள ஏழுதிருக்கரங்களையுடைய விநாயகரின் திருவுருவமும், அருகிலுள்ள வீணைவாசிக்கும் சரசுவதியின் திருவுருவமும் சிற்பச்சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இங்கு உள்ள நர்த்தன விநாயகர் படிமமும் கண்டுகளிக்க வேண்டிய ஒன்ருகும். சந்நிதி வாயிலில் உள்ள துவாரசக்தியின் திருவுருவங்கள் சிறந்த முறையில் அமைந்து உள்ளன. இக்கோயிலின் தென்திசையில் மணிவாசகப் பெருமான் தங்கி இருந்தத் திருமடம் ஒன்றும் உள்ளது.

தில்லையின் எல்லையிலே எல்லை தெய்வமாகிய அருள்மிகுதில்லை யம்மன் ஆலயம் அமைந்திருப்பது ஒரு சிறப்பு. அதில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மாத அமாவாசைக்குப்பின் பௌர்ணமிக்கு முன் சில தினங்களில் கதிரவனின் பொன்மயமான கிரணங்கள் அம்பாளின் மேனியை அலங்கரிப்பது அதிசயமான காட்சியாகும் மாலை 5-45க்கு மேல் 6-15க்குள் சூரியனின் ஒளி அம்பாளின் சந்நிதி வழியாகச் சென்று அம்பாளின் திருமேனி பூராவும் பொன் ஒளியாக விளங்கச் செய்யும் காட்சி ஒரு தனிச் சிறப்பாகும்.

தில்லை வனமுடைய பரமேசுவரியாகிய இவ் அம்மைநான்கு திருமுகங்களுடனும், நான்கு திருக்கைகளுடனும் கருவறையில் எழுந்தருளியுள்ளாள். அம்பிகையின் நான்கு திருமுகங்களும் நான்கு வேதங்களின் உருவங்களாகப் போற்றப்படுகின்றன. நான்முகக் கடவுளாகிய பிரமதேவன் உலக அன்னையாகிய பராசக்தியை எண்ணித் தியான நிலையில் இருந்தபொழுது அம்மை நான்கு திருமுகங்களுடனும் அவரிடத்தேதோன்றிக் காட்சியளித் தருளினுள் என்பர். அதுபற்றியே இவ் அம்மைக்கு பிரம்மச் சாமுண்டீசுவரி என்ற திருநாமம் உளதாயிற்று என்பர். தில்லையில் கூத்தபெருமானுக்கு வழிபாடு செய்யும் தில்லைவாழ் அந்தணர் களே தில்லையம்மனுகிய இத்தேவிக்கும் வழிபாடு செய்கிருர்கள்.

Koviloor Digital Library

வடமொழி இலக்கியத்தில் கவிஸார்வபௌமன் எனப்புகழப்படும் காளிதாசகவி இங்கு வந்து இத்தில்லைக் காளியைத் தரிசித்து அவள் திருவருளால் வடமொழியில் பெரும் புலவனுனுன் என்றதொரு செய்தியும் வழங்குகிறது. இவ்வாறு தன்னை வழிபடும் அன்பர்களுக்கு வீரம், கல்வி, செல்வம் முதலிய எல்லா நலன்களையும் வழங்கியருளும் அருட் குறிப்புடன் தேவி இத்திருக்கோயிலில் வீற்றிருக்கிருள். தில்லைத்தலத்தை அடைந்து நடராசப் பெருமானை வழிபடும் அன்பர்கள் முடிவில் அப்பெருமானது அருளுக்குரிய வீரசக்தியாகிய தில்லையம்மன் திருக்கோயிலையடைந்து அவ் அம்மையை வணங்கி அன்பு காணிக்கை செலுத்தித் தம் வழிபாட்டினை நிறைவு செய்து கொள்ளுதலை வழக்கமாகக் கொண்டிருந்ததலை யாவரும் அறிவர். தில்லைத் தலத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் தில்லையம்மனை வழிபடும் அன்பர்கள் அவ்அன்னையின் திருவருளால் இம்மை, மறுமை, அம்மை என்னும் மும்மை நலன்களையும் பெற்று இன்புறுவர் என்பதுதிண்ணம்.

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றுயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுறுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்தவே நிற்பாய்

—இளங்கோவடிகள்

Koviloor Digital Library

திருவாசகமணி

கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள்

இயற்றிய

தில்லைக் காளியம்மன் திருப்பதிகம்.

விருத்தம்.

---

1 சீராரும் பச்சைக் கலாப மயிலே சிவச்
செம்மலர் மகிழு மயிலே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
தேமரு பசுங் கிள்ளையே
காராரும் உருநீல வண்ணக் களஞ்சியக்
கண்ணற்கு மினிய தங்காய்!
கன்னலே கவின் மேவு மின்னலே என்னுமிடை
காட்டிமுன் நாட்டியத்தைப்
பாராரு மக்களொடு வானுடர் புக்குநனி
பார்த்திட நடித்த பாவாய்!
பண்ணுலவு பைந்தமிழ் உண்ணிலவு மென்மொழிப்
பாவையர்கள் வாழும் பதி
தேராரு வீதியொடு தேனுறு சோலை சூழ்
தெய்வச் சிதம்பர மெனும்
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளி உமையே

Koviloor Digital Library

2 மாகயிலை மீதுறையு மன்னுளிலே எங்கள்
மாதவனை வேண்டி நீயும்
மண்ணுலகில் நண்ணிநடம் பண்ணுதற் கோர்வரம்
மகிழ்வோடு பெற்றுவந்தே
மேகநிற மாதுநீ மேவியுல கந்தனில்
மேலான நடன மாட
மிக அதிர புவனங்கொள் சரமொடுபல் அசரங்கள்
வீழுநிலை சூழுமந்நாள்
நாகமணி செஞ்சடையன் ஏகனவன் வந்துடனும்
நடனமது செய்ய நின்னுண்
நடுவிலுற நின்னடம் நயமழிய அன்றுடன்
நகர வெல்லைக் கப்புறம்
தேகமது வியர்வறத் தேசமது உயர்வுறத்
திருவுயர உருவொடுறைவாய்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே.

3 பச்சைக் குகந்தஎழில் மரகதத் தொளியுமெண்
பக்கங்களும் சூழ்ந்திட
பழகுகுழல் ஓசைபயில் பாளுறு தேனுறு
பைங்குமுத வாயுமாட,
இச்சைக் குகந்தசிலை என்னுநுத லாடஉல
கெங்கணும்அ திர்ந்தாடிட,
இகல்விழியின் மகரமும் அம்மகரமே பொருளும்
இருமகர மும் ஆடிட
விச்சைச் குகந்தவுயர் வித்தகிநீயாடி
விண்ணொடுமண் ஆடவைத்தாய்
வேதமொடும் ஆகமம் வேண்டிப் பணிந்திடும்
விஞ்ஞான வான மயிலே
செச்சைக் குகந்தநற் செந்தாமரைகள்மலி
சீர்கழனி சூழும்பதி
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே.

Koviloor Digital Library

4 அள்ளக் குறைந்திடா வெள்ளத் தமிழ்தமாம்
அன்னையே நின்னைநாளும்
அண்டிப் பிழைத்திடா தண்டத்துள் வாழ்பவர்
அஞ்சிப் பிழைப்பர் அந்தோ !
கள்ளக் குணத்தினேன் உள்ளத்து மாசுளேன்
காமக் குளத்தில் ஆழ்வேன்
கையைப் பொருத்தியுமுன் காலைப்பிடித்துமுயர்
கரையேற இதுபோழ்துமென்
உள்ளக் கருத்தினைக் கள்ளிற் சிறந்ததமிழ்
ஒண்கவியி னுலுரைத்தேன்
உத்தமத் தொண்டர்பலர் தத்தமக் குற்றவகை
ஓதிப் பணிந்து பாட
தெள்ளத் தெளிந்த அமிழ் தென்னதகுந்ததமிழ்
தித்திக்கும் முத்திப்பதி
தில்லைத்தலத் தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே.

5 கிளையாடு நின்திருக் கேசபா ரத்தினொடு
கிளர்சேவ லங்களாட
கிழித்தெழு சுடர்பரிதி என்னுமணி நூபுரம்
கிண்கிணென ஆடநின்கை
வளையாட இருகுங்கு மக்குன்றெனச்சொல்முலை
வரைகளவை ஆட ஆட
வன்மையுற நீயாடி வள்ளலார் உடன் ஆடி
வானொடு மண்ணுலகமாட
விளையாடு நங்கையே விண்ணுடு வித்தகீ
விளையாடி யொழிய அருளாய்;
வீறிட் டழுமுயிர்கள் தேறிட் டெழுந்துயர
வேண்டிக் கனிந்தருளுவாய்,
திளையாத தெள்ளமுது வரையாது தந்தெனது
ஜென்மசாபல்ய மருள்வாய்
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே.

Koviloor Digital Library

6 வெங்கொடும ரக்கர்தமை வெட்டிக் குடித்தவர்தம்
வீரப் பெருங் குருதியை
விரிட் டெழுந்துலகு கூரிட்டலர்ந்தழிய
வெய்யநடம் ஆடிநீமுன்
எங்கணுமே மக்கட்கு மாம்இரிந் தோடஅவர்
"என்றனக் கேற்ற ஊண்" என்(று)
இச்சை வைத்தாய் அவர்தம் பச்சையூன் தன்னிலே
எங்கள்வேற் காளியம்மே !
அங்கவர் தமைக்கூடி ஆதரவு தந்துலகும்
அழியாத வண்ணமரனார்
ஆர்த்தமர்காண நல ஊர்த்துவ நடம் ஆடி
அம்மைநின் வெம்மைதீர்த்தார்,
திங்களூறு நல்வதன மங்கையர்கள் எங்குமலி
தெய்வத் திருப்பதியதாம்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே

7 போருலவு சூலத் துடன்நீ புரிந்திடும்
புன்புலால் நாறு நடனம்
பூவுலகில் அந்நாளி லேஉதிர வெள்ளமது
போக்கிடச் செய்த அதுபோல்
பாரதனில் இன்றுநீ பாய்ந்து நடம் ஒன்றுமே
பண்ணாதிருந் தருளுவாய்
பட்டணமும் சிற்றூரும் பாலரொடு மாதாரம்
பல்கோடி நல்லுயிர்களும்
கோரமுடன் மாண்டுதீக் கிரையாகி ரத்தக்
குழம்பிலே சார்ந்து சாம்பற்
குவியலாய்க் கூடியிப் புவி யெலாம் நைந்திடும்
கொலைபோதும் போதும் இனியே ¡
சீருடன் எதிர்கால ஜெகமெலாம் வாழநனி
செய்க அருள் தெய்வமணியே
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே

Koviloor Digital Library

8 அகிலாண்ட கோடிகள் அவைமீதிலங்கிடும்
அளவில்ச ராசரங்கள்
அத்தனையு முன்வயி றுயிர்த்துநனி யேவளர்த்
தன்புடன் ஆதரிப் பாய்
முகிலார்ந்த திருமேனி ஜகதாம்பி கேபெரும்
மூலப் பரம்பொருட்குர்
முதலான சக்தியே முடிவான முக்தியை
மூர்க்கனேற் கருள்செய்குவாய்
சகியாத துன்பமுறு சாகரந் தன்னிலினி
சலியா திருக்க இயலேன்
சனியாதி கோள்களும் இனியாகிலும் நவை
தமை நீங்கி உதவ அருள்வாய்
திகிலால் இவ்வையகம் திரியாதவண்ண நீ
திருவார்ந்த அருள் செய்குவாய்
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே.

9 பொன்மேரு வில்லியைஎ திர்ப்பட்ட ஞான்றிலுன்
பொம்மன்முலை மூன்றிலொன்று
புருடோத்த மன்சிவன் புதுநோக்கு சார்ந்திடப்
புணர் இன்பம் உற்றெருடுங்க
நின்மேனி தன்னிலொரு நிறைநாண மதுமேவி
நீங்கியபின் மற்றெருமுறை
நீநாண மதைமிகவு னேநானி லலுத்திற
நிர்ப்பந்த முற்ற சமயம்
தன்மேனி கொண்டெழில் தழல்மேனி நடராஜர்
தமதுகாற் கொண்டூர்த்துவத்
தாண்டவம் அது செய்தும் ஈண்டுனே அமர்வித்த
சந்தர்ப்பம் என்றறிவர்காண் !
தென்மேரு என்னுமோர் பொன்மேவும் அம்பலம்
திகழும் புகழ்ப்பதியதாம்
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே.

Koviloor Digital Library

10 சாற்றிடும் பல்சமய நச்சரவெனும் தீய
சச்சரவு தன்னிலு முன்
சார்ந்திட்ட ஒவ்வாத சாத்திரப் படுகுழியில்
தாழும் சழக்கர் இடையும்
கூற்றினை நிகர்வெய்ய கோத்திரம் ஜாதிகுலம்
கொண்டாடு கூட்டத்திலும்,
கூடாதியானிந்த நாடானதும் ஓங்கு
கொள்கைமிகவே கொண்டுமே
மாற்றிஇது போதுள்ள மனிதச் சமூகமே
மாண்புடையதாக ஓங்கி
மாசற்ற சமதர்ம தேசுற்றவழி வாழ
மனமார்ந்த தொண்டு செய்வான்
தேற்றியருள் செய்திட்ட ஊற்றினருள் பெய்திட்ட
தேசுமலி ஈசுவரியே
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே.

11 என்னதல புண்ணியம் யானுங்கியற்றினேன்
இவ்வாழ்வில் ஈண்டுற்றியான்
இன்னலவை நீங்கினற் கன்னலெனு நற்சுவை
ஏய்ந்திடும் தீந்தமிழினல்
சொன்னல முடன்நினது தோத்திரம் பாடிநான்
சொன்னநலம் எல்லாம்பெற
தூயமா காளியே நேயமார் ஆழியே
தொல்லுலகு போற்றும் அன்னய்
பன்னநலம் ஆர்ந்திடும் பாமாலை பாடிடும்
பாலசுப் பிரமணியம் ஆம்
பாலன் எனக்குனருள் பாலித்து மிக்கபொருள்
பரிவோடிரங்கி யருளாய்
தென்னையொடு கமுகுமா தீங்கரும் பென்னுமிவை
செங்கழனியோடு சூழும்
தில்லைத் தலத்தருகில் எல்லைப்புறத்திலமர்
தில்லைமா காளிஉமையே!

Koviloor Digital Library

பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் இயற்றிய
காளி பதினாறு

---

1 தில்லை ஆட்டக்காரி — நீ
செய்யடி ஓர் மாயம்!
எல்லை யற்ற இன்பம் — இங்கு
யாவர்க்கும் வேண்டும்;
கல்லையு முருக்கும் — கருணை
கான மெனப் பொழிவாய்!
இல்லை யாக்கிவைப்பாய் — இங்கு
இல்லை என்ற சொல்லை;

2 சொல்லை அமுத மாக்கி — வாழ்வை
தூய கீதமாக்கி.
அல்லைப் பகலை நினையா — அன்பின்
ஆடல் பாடல் காட்டி,
வில்லை விடத்தை யஞ்சா — நெஞ்சில்
வீரசாந்த முட்டி:
முல்லை கமலம் போலே — உனக்கே
முழுதும் உரிமை யாக்கு!

3 ஆக்கி ஆண்டு அழிக்க — வல்ல
ஐந்து தொழிலை கொண்டாய்
நோக்கில் முப்புறத்தை — எரித்தோர்
நெஞ்சில் வாழும் அம்மா
தாக்கும் அமுதபானம் — சொல்லாய்
நாலு வேதத் துள்ளும்
போக்கும் வரவுமில்லா — இன்பம்
பொங்கும் கருணை முகமே

Koviloor Digital Library

4 முகங்கள் நான்கும் கையில் — கொண்ட
மூல மந்திரமாலே
அகந்தை தாக்குஞ்சூலம் — அன்பு
அபயம் கொடுக்கும் சொகுசு
ஜெகத்தி லுன்னைப் போல — காளி
சாத்திரத்தில் இல்லே
மகத்துக்கெல்லாம் பெரியான் — ஆட
மகிழ்ந்து ஆடும் அம்மே!

5 அம்மா முன்னை வுலகம் — ஈன்ருய்
அழகுத் தெய்வக் கன்னி
இம்மா யாவுயிர்கள் — மாறும்
என்று மாருதாள் நீ!
சும்மா என்னுள் வந்து — இருந்து
சுகவடிவ மாக்கி
எம்மா லெய்த இயலா — இன்பம்
எங்கும் பொங்கச் செய்தாய்!

6 செய்த தெல்லாம் நீயே — இனியும்
செய்யப் போவதும் நீ
உய்வு வேண்டு மானல் — இதனை
உலக முணர வேண்டும்
அய்யம் நீங்க வேண்டும் — கொடிய
ஆசை மாற வேண்டும்
செய்ய தாளிலாணே — இதனை
தெரியகாட்ட வேண்டும்

7 வேண்டும் என்ற எண்ணம் — அம்மா
வேருே டழிய வேண்டும்
தூண்டு மன்புவெள்ளம் — உன்னுள்
தேங்கிப் பொங்க வேண்டும்
ஈண்டு உன்னலாகாச் — செய்கை
யேதுமில்லைக் காளி
நீண்டு வாழும் அருளே — உலகம்
நித்தம் கொள்ள தா! தா!

Koviloor Digital Library

8 தா தா என்ற குரலே — தாய் நீ
தட்டி போக லாமோ
வேதா எழுதும் விதியும் — மாறும்
விருப்ப முன்னிலென்ருய்
ஓதா கல்வி செல்வம் — அழியா
உம்பர் வாழ்வும் உன்பால்
காதல் கொண்டா லுண்டு — காளி
காட்சி வேண்டினே னுன்

9 நான் எனது என்றே — உலகில்
நாடகங்கள் காட்டி
ஊன் உடல் வகைகள் — ஆட
உயிர் உணர்வு தந்தாய்
தேன் மதுர இனிமை — தெய்வ
சித்தி எட்டும் அம்மா
ஆன்மபோத முன்னல் — கொண்டால்
அடிமையாகாதோடி!

10 ஓடிவந்தேன் காளி — உன்பால்
உயிரை வைத்து விட்டேன்
பாடி பித்தானேன் — காளி
பர்தம் விட்டுச் செல்லேன்
கோடி பொன்னும் விண்ணும் — காளி
பொற்கழற்கு ஈடோ?
நாடி வருவார்க்கெல்லாம் — காளி
நல்லதாய் நீ தானே

11 தானே தானய் ஆடும் — பரமன்
தத்துவங்கடந்த வெளியில்
'தேனே' என்று மகிழ்ந்தே — கூட
தெவிட்டாதாடுங் காளி
ஊனே! உயிரே உணர்வே — பக்தி
ஊட்டும் அன்புக்கடலே
நானே இல்லா துன்னில் — கலந்தேன்
நாதவிந்த வெளியே

Koviloor Digital Library

12 வெளியே உள்ளே உள்ள — எதுவும்
விரும்பியா டுதுன்ஞல்
ஒளியே கண்ணின் மணியே — உயிர்ப்பே
ஒருமை பன்மை உன்ஞல்
அளியே போலுன் மலர்த்தாள் — அம்மா
அண்டிப் பெற்று விட்டேன்
களியே பொங்கும் கள்ளை — உண்டேன்
கால தேசம் போச்சு

13 போச்சு இங்குஎல்லாம் — உன்பாற்
பொங்குகாதல் மிச்சம்
ஏச்சு அதிகமாச்சு — உலகார்
அறிவில் நாஞேர் பித்தன்
ஆச்சு உன்பொருப்பு — அடிமை
அடங்கி அமர்த்திடுவேன்
மூச்சும் நின்றுபோகும் — பின்னர்
முழுமையும் நின்போகம்

14 போக பாக்யம் கொண்ட — தெய்வர்
போற்றுங் கற்பகமே!
யாக யக்ய யோகம் — காட்டும்
ஏதுமான காளி!
மோக வேக அசுரர் கூட்டம்
மாய்க்குஞ் ஞான சக்தி
சாக வில்லா உயிரும் — அழியா
சக்தி யுடலும் நின்ஞல்!

15 நின்ஞல் எல்லாமேதும் — நித்திய
நிர்த்தனஞ் செய் காளி!
பொன்ஞல் பயணைபோலே — உலகில்
என்ஞல் பயனிங் கேது!
சொன்ஞல் விரிந்துபோகும் — தேவி
சும்மா யிருக்கச் சுகமாம்
தன்ஞல் இன்ப அன்பு — கனிய
தாய் நீதான் மெய்ஞ்ஞானம்!

Koviloor Digital Library

16 ஞான பக்திகர்மா — கடந்த
. நல்லதோர் மெய்நிலையே
மோன தூரிய தீத -- வெளியில்
விளங்கும் பேரொளியே
கானம் நினைவு மௌனம் — ஒன்றும்
காட்சி ஓம் நின் ஒலியே
த்யான மாகுமெல்லாம் -- ஒன்றில்
தங்கும், பின்; நீ காளி
பத்தும் ஆறும் சொன்னேன் - காளி
பக்தி பித்த வெளியால்
சித்தும் மேலாஞ் சக்தி — என்னில்
சித்தியாகி ஒடுங்க
பத்தும் அகன்று போச்சு -- காளி
பரம இன்பந்தன்னில்
ஒத்துப் போனேம் நாமே -- தில்லை
யிருப்பவள் நீ காளி.

ஓம்மாதா


KOVILOOR ANDAVAR
A. No. 46312
LIBRARY, KOVILOOR

